| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | மாது | நாள் | 16.09.2021 |
| தகப்பனார் பெயர் | செங்கோடகவுண்டர் | | |

5, 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

07.03.1955 பத்திரத்தில் 3 ஏக்கர் 30 சென்ட் கிரையம் பெற்றுள்ளோம். மொத்த விஸ்தீரணம் 19 ஏக்கர் 82 சென்ட். 05.04.1977 ல் செங்கோட கவுண்டர் 2 ஏக்கர் 20 சென்ட் வாங்கினார். அதன் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 50 சென்ட். 06.02.1975 ல் 3.30 ஏக்கர் கிரையம் வாங்கினோம். அதன் மொத்த விஸ்தீரணம் 19 ஏக்கர் 82 சென்ட். மேற்படி 3 கிரையப்பத்திரங்களிலும் உள்ள சொத்துக்கள் ஒரே சர்வே எண்ணிற்குரியது. மூன்று ஆவணங்களையும் சேர்த்து 8 ஏக்கர் 80 சென்ட். 19 ஏக்கர் 82 சென்டில் நாங்கள் வாங்கியது 8 ஏக்கர் 80 சென்ட். அதே சர்வே எண்ணில் விற்பனை செய்தவருக்கு மீதி 11 ஏக்கர் 2 சென்ட் இருந்தது என்றால் ஆமாம். அந்த 11 ஏக்கர் 2 சென்டை யாருக்கு விற்பனை செய்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். செல்லப்பகவுண்டருக்கு அவருடைய மைத்துனருக்கு 1982 ல் ஆவண எண்.1207 ல் 2 ஏக்கர் 80 சென்டை விற்றுவிட்டார். அதே செல்லப்பகவுண்டர் சகோதரரி செல்லம்மாளுக்கு 1982 ல் ஆவண எண்.1206–ல் 4 ஏக்கர் 23 சென்ட் விற்பனை செய்துள்ளார். கே.ஆர்.மணி அவருடைய அப்பாவிடமிருந்து 2 ஏக்கர் 6 சென்டை 1981 ல் வாங்கிவிட்டார். சித்தப்பா சின்ன ராமசாமியிடம் கே.ஆர்.மணியின் மனைவி பெயரில் 1 ஏக்கர் 42 சென்ட் வாங்கியுள்ளார். கே.ஆர்.மணியின் மைத்துனர் தேவராஜிக்கு சின்னப்பகவுண்டர் 2 தாக்குகளாக தேவராஜிக்கு விற்பனை செய்ததில் முதல் தாக்கு 66 சென்ட். 2 வது தாக்கு 46 சென்ட். அதில் எங்களுடைய 6 ஏர்ஸ் நிலத்தையும் சேர்த்து விற்பனை செய்துவிட்டார். அது போக மீதி நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் மேலே கூறிய பத்திரங்கள் 11 ஏக்கர் 2 சென்டிற்கு உரியதல்ல என்றால் சரியல்ல. சின்னப்பகவுண்டர் 6 ம் பிரதிவாதி தேவராஜிக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் விற்பனை செய்தார் என்றால் ஆவண எண்.254 ல் 1988 ம் வருடம் விற்பனை செய்துவிட்டார். 3 ம் பிரதிவாதிக்கு எந்த வகையில் பாத்தியம் என்றால் ஆவண எண்.1207 ன் அடிப்படையில் 1982 கிரையம் பெற்ற வகையில் பாத்தியம். சின்னப்பகவுண்டர் ஆவண எண்.1207–ல் முறையான நபரிடமிருந்து தான்

வாங்கியுள்ளார் என்றால் இல்லை. முறையான நபரிடமிருந்து கிரையம் பெறவில்லை என்பதற்காக வருவாயத்துறையினரிடம் புகாரளித்துள்ளேனா என்றால் புகாரளித்துள்ளேன். அந்த மனுவை கோட்டாட்சியர் தள்ளுபடி செய்துவிட்டார் என்றால் ஆமாம். ஆனால் மீண்டும் கேட்டதற்கு பரிசீலனை செய்வதாக கூறினார். 2007 ல் தான் பரிசீலனை செய்யவேண்டும் என மனு கொடுத்தோம் என்றால் 2015 ல் தான் கொடுத்தோம். சுமார் 6 வருடமான நிலையில் அந்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2007 ல் மேட்டூர் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளநிலையில் அதனை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் மனு மீது நடவடிக்கையே எடுக்கவில்லை. தள்ளுபடி செய்ததற்கு எதிராக மேல்முறையீடு செய்யாமல் நீதிமன்றத்தில் அது குறித்து கூறமுடியாது என்றால் சரியல்ல. அந்த மனு மீது மேல்முறையீடு செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1982 ம் வருடபத்திரம், 6 ம் பிரதிவாதி பெயரில் உள்ள பத்திரம் ஆகியவை அந்தந்த பத்திரங்கள் ஏற்படும்போதே தெரியும் என்றால் தெரியாது. எப்போது தெரியும் என்றால் 2010 ல் நகல் எடுத்துப்பார்த்தபோது தான் தெரியும். 2007 ல் மேற்படி ஆவணங்கள் குறித்து தெரியுமா அல்லது 2010 ல் தெரியுமா என்றால் 2007 ல் போர்ஜரியாக செய்த ஒரு பகுதி ஆவணம் மட்டும் குறித்து தெரியும். 1988 ல் ஆவண எண்.254 ல் அதுபோல் போர்ஜரி செய்துள்ளார். அந்த ஆவணத்தை எடுத்துப்பார்த்தபோது அதற்கு முன்பு உள்ள ஆவணங்கள் குறித்து எனக்கு தெரிந்திருக்கும் என்றால் ஆமாம். 2007 ல் 1988 பத்திரத்தை வாங்கி பார்த்தபோது 3 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஆவணத்தை குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். 2007 லேயே அந்த ஆவணங்களை குறித்து தெரிந்து கொண்டு 2010 ல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் காலவரையறை சட்டப்படி இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிமையில்லாமல் எத்தனை ஆவணங்களை உருவாக்கியுள்ளதாக நான் கூறுகிறேன் என்றால் 6 ஆவணங்களை உருவாக்கியுள்ளார்கள். 1982 மற்றும் 1988 ஆவணங்கள் 2007 லேயே தெரிந்தபோதும், மற்ற ஆவணங்கள் 2010 ல் தெரிந்ததாக கூறியுள்ளபோதும் அந்த ஆவணங்கள் செல்லதக்கதல்ல என ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை

எடுத்துவருகிறோம். ராமசாமி, ராமசாமி மற்றும் சின்னப்பகவுண்டர் இறந்ததற்கு மொத்தம் 3 முறை வழக்கு திருத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த 3 முறையும் போலியான ஆவணங்கள் என கூறும் ஆவணங்களை ரத்து செய்ய வழக்கை திருத்தவில்லை என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்து சுமார் 11 வருடங்கள் ஆகிறது என்றால் ஆமாம். நானும், என்னுடைய தகப்பனாரும் நல்ல சுயநினைவோடு தான் சாட்சியம் அளித்துள்ளோம் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி சரியான நபரிடமிருந்து தான் கிரையம் பெற்றுள்ளார் எனவும், அதன்படி தான் மற்ற ஆவணங்களையும் எழுதிகொடுத்துள்ளார் என்றால் 3ம் பிரதிவாதி சின்னப்பக்கவுண்டர் 1982–ல் கிரையம் வாங்கும்போது 2.82–யை தான் கிரையம் வாங்கினார். ஆனால் 3ம் பிரதிவாதி 1988 ல் விற்கும்போது 1982 ல் 3.35 ஹெக்டேரை கிரையம் பெற்றதாக கூறி விற்பனை செய்துள்ளார். 6 ஏக்கர் தான் பாத்தியப்பட்டுள்ளநிலையில் 8 ஏக்கரை கிரையம் கொடுத்துள்ளார். நான் கூறுவது தவறு எனவும், 3ம் பிரதிவாதி வாங்கியது, 3ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதி விற்பனை செய்தது ஆகியவை தவறான பத்திரங்களாக இருந்திருந்தால் பரிகாரம் கோரியிருப்போம் எனவும், அவ்வாறு கோராதிருந்ததிலிருந்தே அந்த ஆவணங்கள் சரியான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் குறித்து பரிகாரம் கோராதநிலையில் அந்த ஆவணம் குறித்து எனக்கு சாட்சியம் அளிக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணைக்கு பின்னிட்டு அந்த பரிகாரம் கோருவேன் என கூறுவதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சட்டப்படி கிரையம் பெற்று அனுபவித்து வரும் சொத்தை அபகரிப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.